## 11 சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை - 06.02.2026

## கழகத்தின் வெற்றிக்கு கட்டியம் கூறும் பொதுமக்கள் கூட்டம்!









சென்னை, பிப்.9-

**திராவிட மாடல் அரசின் ஐந்தாண்டு சாதனைகளை விளக்கும் விதமாகவும், ஒன்றிய பாஜக அரசும் அதன் அடிமைக் கூட்டணியும் தமிழ்நாட்டுக்கு செய்து வரும் துரோகத்தை தோலுரிக்கும் விதமாகவும் தமிழ்நாடு முழுக்க தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக்கூட்டமானது நடத்தப்பட்டு வருகிறது.**

கழகத் தலைவரது உத்தரவின் பேரில் 06.02.2026 அன்று 11 சட்டமன்றத் தொகுதிகளில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக் கூட்டங்கள் மாபெரும் எழுச்சியோடு நடைபெற்றன.

கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதியில் திரு. கடலூர் புகழேந்தி அவர்கள், விழுப்புரத்தில் திரு. எழிலன் நாகநாதன் அவர்கள், ஆவடியில் திரு. கலாநிதி வீராச்சாமி அவர்கள், அம்பத்தூரில் திருமதி. கனிமொழி சோமு அவர்கள், திருப்பெரும்புதூரில் திரு.எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள், சேலம் வடக்கில் திரு. தயாநிதி மாறன் அவர்கள், அவிநாசியில் திரு. அந்தியூர் செல்வராஜ் அவர்கள், மண்ணச்சநல்லூரில் திரு. ஆர். எஸ். பாரதி அவர்கள், குறிஞ்சிப்பாடியில் திரு. திண்டுக்கல் ஐ. லியோனி அவர்கள், பேராவூரணியில் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள், சிவகங்கையில் திரு. பொன்.முத்துராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இப்பரப்புரைக் கூட்டத்தின் போது ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் சரித்திர சாதனைகளையும் அதனால் தமிழ்நாடு அடைந்துள்ள வளர்ச்சியையும் மக்கள் முன் எடுத்துரைத்தனர் சிறப்பு பேச்சாளர்கள். அத்துடன் ஒன்றிய பாஜக அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட ஒதுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டதையும், கல்வி நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, பேரிடர் நிதி என முறையாக எந்த நிதியும் ஒதுக்காமல் , புதிய வளர்ச்சி திட்டங்களுக்கும் அனுமதி அளிக்காமல் முட்டுக்கட்டை போட்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வரும் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியின் வஞ்சகத்தை பொது மக்கள் மத்தியில் எடுத்துரைத்தனர் கழக நட்சத்திரப் பேச்சாளர்கள்.

இன்றைய பரப்புரைக் கூட்டங்களுக்கு ஆயிரகணக்கான பொது மக்கள் திரண்டு வந்து ஆதரவு வழங்கினர். அதிலும் குறிப்பாக இளைஞர்கள் பட்டாளமும், பெண்களும் அதிகளவு திரண்டு வந்து ஆதரவு தெரிவித்தனர். அதிமுக பாஜக கூட்டணியால் தமிழ்நாடு பட்ட அவலத்தையும், அந்த டப்பா எஞ்சின் தமிழ்நாட்டில் நுழைந்தால் ஏற்படும் ஆபத்தையும் பேச்சாளர்கள் சுட்டிக் காட்டி பேசியது மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றது.



கடலூர் மேற்கு மாவட்டம்,விருத்தாசலம் அடுத்த தே.கோபுராபுரம் (தமிழ்நாடு தலைகுனியாது) பொதுக் கூட்டத்திற்கு முன்பாக விருத்தாசலத்தில் பேறிஞர் அண்ணா சிலைக்கு அமைச்சர் சி.வெ. கணேசன் மாலை அணிவித்தார். தலைமைக் கழக பேச்சாளர் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ்,தொகுதி மேற்பார்வையாளர் குலோத்துங்கன், நகர செயலாளர் தண்டபாணி, நகர்மன்ற தலைவர் டாக்டர் சங்கவி முருகதாஸ், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வி.டி.கலைச்செல்வன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாளை - 10ஆம் தேதி - கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமையில்

## மதுரையில் தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கருத்துக் கேட்பு கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி எம்.எல்.ஏ. மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை,பிப். 9-

திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கருத்துக் கேட்பு கூட்டம் நாளை 10.02.2026 மாலை 5 மணிக்கு பாண்டி கோவில் ரிங் ரோடு பின்புறம் அமைந்துள்ள துவாரகா பேலஸ் திருமண மண்டபத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்பி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளதாகவும் இதில் கழகத்தினர், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த வணிகர் சங்கங்கள், விவசாய சங்கங்கள், சமூக நல ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்று தங்களது கோரிக்கைகளை மனுக்களாக வழங்கிடுமாறு வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம் எல்ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளனர் அதன் விபரம்

ஒவ்வொரு தேர்தலிலும் மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் கழகத்தின் தேர்தல் அறிக்கை இருக்கும் அதன் அடிப்படையில் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலுக்காக தமிழ்நாட்டை வளமாக்கும் திராவிட மாடல் 2.0 அரசுக்கான தேர்தல் அறிக்கையை தயாரிக்க கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குழு ஒன்றை அமைத்துள்ளார்

அதன்படி தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவின் கருத்துக் கேட்பு கூட்டம் கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்பி அவர்கள் தலைமையில் மதுரை பாண்டி கோவில் ரிங் ரோடு பின்புறம் அமைந்துள்ள துவாரகா பேலஸ் திருமண மண்டபத்தில் நாளை 10.02.2026 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி அளவில் நடைபெறுகிறது

இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த வணிகர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், குடியிருப்போர் நல சங்கங்கள், விவசாய சங்கங்கள், மாணவர் அமைப்புகள், சமுதாய சங்கங்கள், சமூகநல ஆர்வலர்கள் என அனைவரும் கலந்து கொண்டு தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவின் கருத்து கேட்புக் கூட்டத்தில் தங்களது கோரிக்கைகளை மனுக்களாக வழங்கிட வேண்டும் எனவும் கழகத்தினர் தங்கள் பகுதியில் உள்ள சங்கங்களின் கோரிக்கை மனுக்களை தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்து கேட்புக் கூட்டத்தில் வழங்கிட ஏற்பாடு செய்யுமாறும் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம் எல்ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**இரா.சு. தங்கராசன்**
**பிப்ரவரி 9 (1985)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, உசிலம்பட்டி வட்டக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், நீண்டகாலம் தொடர்ந்து சேடபட்டி ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர், உசிலம்பட்டி நிலவள வங்கி தலைவர் பொறுப்பு வகித்தவர்.**

**இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு, மிசா எதிர்ப்பு, கருப்புக் கொடி உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு பல முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


### வி.ஐ.டி. வேந்தர் கோ.விசுவநாதன் தலைமை! பெருங்கவிக்கோ

## வா.மு.சேதுராமன் 91 ஆம் அகவை புகழ் வணக்கம் - படத்திறப்பு!

### கி.வீரமணி – அமைச்சர் மா. சுப்பிரமணியன் – வி.ஜி.சந்தோசம் பங்கேற்பு!

சென்னை, பிப்.9-

தமிழியக்கம் - பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் மற்றும் உலகளாவிய தமிழ் அமைப்புகள் நடத்தும் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் 91ஆம் அகவை புகழ் வணக்கம் படத்திறப்பு விழா இன்று (9.2.2026 - திங்கள்) மாலை 5.30 மணியளவில் பெரியார் திடல், எம்.ஆர்.ராதா அரங்கில் டி.கே.எஸ். கலைவாணனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நடைபெறுகிறது.



இந்நிகழ்ச்சிக்கு வி.ஐ.டி. வேந்தர் கோ. விசுவநாதன் தலைமை வகிக்கிறார்.

கவிஞர் கலி பூங்குன்றன், முனைவர் வீ.அன்புராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், பெருங்கவிக்கோவின் படத்தை திறந்து வைத்து - புகழ் வணக்கம் செலுத்துகிறார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நினைவு மலரை வெளியிட, டாக்டர் வி.ஜி. சந்தோசம், டாக்டர் சேதுகுமணன் ஆகியோர் பெற்றுக் கொள்கிறார்கள்.

இதில் பேரா. சுப. வீரபாண்டியன், டி.கே.எஸ். இளங்கோவன், பேரா. அப்துல் காதர், வந்தியத்தேவன், எஸ்.எம். இதயதுல்லா ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றுகின்றனர்.

வா.மு.சே. திருவள்ளுவர் வரவேற்றிட, பேரா. வா.மு.சே. ஆண்டவர், வா.மு.சே. கவி அரசன், வா.மு.சே பூங்கொடி மதியழகன் வா.மு. சே. தமிழ்மணி கண்டன், பொன். மீனாட்சி சுந்தரம் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



விழுப்புரம் சட்டமன்ற தொகுதி சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது மூன்றாவது நிகழ்ச்சியாக, வழுதரெட்டியில் அமைந்துள்ள மு.அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் மணிமண்டபத்தில், அவருடைய திருவுருவச் சிலைக்கு, மாநில மருத்துவர் அணி செயலாளர், திட்டக்குழு உறுப்பினர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மாவட்ட கழக பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் மற்றும் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.